ISSN 2454-3993

3.085 IMPACT FACTOR
JOURNAL WITH SJ TAMIL STUDIES

மலர் 3 • சிறப்பிதழ் 1 • டிசம்பர், 2018

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

தொகுதி - 1

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)
தமிழ் உயராய்வு மையம், மதுரை-18

மலாயாப் பல்கலைக்கழகம்
இந்திய ஆய்வியல் துறை

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்







# தற்காலத் தமிழ் இலக்கியங்களின் நோக்கும் போக்கும்











பதிப்பாசிரியர்கள்
முனைவர் ஆ. பாப்பி கமலா பாய்
முனைவர் சு. குமரன்
முனைவர் க. லதா
திருமதி க. ரேவதி
முனைவர் ஆ. தேவ் மாலா



UGC Approved Journal Number: 40729
VOLUME 3 | SPECIAL ISSUE 1 | DECEMBER 2018
Shanlax International Journal of Tamil Studies
A Peer-reviewed- Refereed Scholarly Quarterly Journal Globally Indexed with Impact Factor

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX INTERNATIONAL JOURNALS
editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

# SHANLAX

INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

மலர். 3 சிறப்பிதழ். 1 திசம்பர், 2018 Impact Factor: 3.085

ISSN: 2454 – 3993 UGC Approved Journal Number: 40729

தொகுதி - 1


பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)
தமிழ் உயராய்வு மையம், மதுரை - 18

மலாயாப் பல்கலைக்கழகம்
இந்திய ஆய்வியல் துறை

சான்லாக்ஸ் பன்னாட்டுத்
தமிழியல் ஆய்விதழ்

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

# தற்காலத் தமிழ் இலக்கியங்களின் நோக்கும் போக்கும்


பதிப்பாசிரியர்கள்

முனைவர் ஆ. பாப்பி கமலா பாய்
முனைவர் சு. குமரன்
முனைவர் க. லதா
திருமதி க. ரேவதி
முனைவர் ஆ. தேவ் மாலா

| | | |
|---|---|---|
| 50 | புதுக்கவிதைகளில் தலித் உரிமைக்குரல்<br>**முனைவர் லீ. பெலிண்டா** | 170 |
| 51 | கவிதை இலக்கியத்தில் பெண்ணியப் போக்குகள்<br>**இர. மணிகண்டன்** | 173 |
| 52 | புலம்பெயர் கவிதைகளும் விளிம்புநிலைக் கோட்பாடும்<br>**முனைவர் ப.ம. மயிலா** | 178 |
| 53 | தற்காலத் தமிழ் நவீனக் கவிதைகள் புலப்படுத்தும் அறத்தின் ஒழுங்கும் ஒழுங்கின்மையும்<br>**செ. மார்ட்டின் ராஜா** | 180 |
| 54 | கவிமணியின் கவிதை இலக்கியத்தில் தத்துவம்<br>**அ. மீனா** | 184 |
| 55 | தற்கால கவிஞர்களின் விஞ்ஞானம் மற்றும் வாழ்வியல் பார்வை<br>**வே. மீனா** | 188 |
| 56 | அப்துல் ரகுமானின் கவிதைகள் : எதிரும் புதிரும்<br>**முனைவர் க. முருகேசன்** | 192 |
| 57 | காதலைக் கவித்துவமாக்கும் கவிஞர் தியாரு<br>**திருமதி. மேரி சுகிர்தா பாண்டியன்** | 197 |
| 58 | புதுக்கவிதைப் போக்கு<br>**முனைவர் ஆ. ரந்திர் குமார்** | 200 |
| 59 | உயிர்க்கவிதைகளின் நோக்கும் போக்கும்<br>**ஜெ. ராஜகுமாரி** | 203 |
| 60 | புதுக்கவிதைகளில் தொல்காப்பிய பொருளியல் மரபுகள்<br>**பெ. ராஜலெட்சுமி** | 205 |
| 61 | தற்காலக் கவிதைகளில் சமுதாயப் பார்வை<br>**முனைவர் செ. ரெஜினா** | 208 |
| 62 | புதுக்கவிதைகள் சமூக அக்கறையின் வெளிப்பாடு<br>**முனைவர் க. லதா** | 212 |
| 63 | பாரதிதாசன் கவிதைகளில் பெண்ணியம்<br>**முனைவர் சி. வடிவேலன்** | 215 |
| 64 | சிறுவர்மணி கதைப்பாடல் - ஓர் ஆய்வு<br>**முனைவர் அ. வளர்மதி** | 218 |
| 65 | ஈழத்து சிறுவர் பாடல் முன்னோடி முயற்சிகள்<br>**திருமதி வானதி பகீரதன்** | 221 |
| 66 | புதுக்கவிதைகளில் எழுச்சியூட்டும் சிந்தனைகள்<br>**முனைவர் த.நா. விஜி** | 224 |

# தற்காலக் கவிதைகளில் சமுதாயப் பார்வை

முனைவர் செ. ரெஜினா
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியை, ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி, பெரியகுளம்

**முன்னுரை**

கவிதை என்பது மனித உள்ளத்தில் தோன்றுகின்ற கருத்துக்களின் வெளிப்பாட்டு வடிவமாகும். இலக்கிய வரிசையில் கவிதை மிகப்பெரும் இடத்தினைப் பெற்றுள்ளது. சொற்களால் ஆகிய எல்லாக் கருத்துக்களும் இலக்கியம் என்று சொல்லப்படுவதில்லை. புதிய செய்தியை உணர்த்துவதே நோக்கமாகும். சமூகத்தில் நடைபெறுகின்ற நிகழ்வுகளை, உழைக்கும் மக்களின் உரிமைப் போராட்டங்களை சமூகத்தில் எளிதில் சேர்ப்பிக்கும் ஒரு கருவியாகும். ந. பிச்சமூர்த்தி தொடங்கி இன்று வரை பரந்திடும் புதுக்கவிதைகள் பல்வேறு போக்குகளை உள்ளடக்கியதாக அமைகின்றன.

**சமுதாயம்**

சமுதாயம் பொது நல ஸ்தாபனமாகும். "சமுதாயம் என்பது பல்வேறு சமூக நிறுவனங்களின் ஒருங்கிணைப்போடு விளங்கும் சமூகக் கட்டமைப்பு" என்பர் சி.இ. மறைமலை. மக்கள் கூடி வாழும் போது, ஒருவர் மற்றவர் மீது ஏதாவது ஓர் உணர்வில் தொடர்புள்ளவராக இருப்பர். ஒருவர் இன்னொருவர்மீது அன்பு காட்டலாம் இணக்கமாக இருக்கலாம் வெறுக்கலாம் சண்டையிடலாம். இத்தகைய வாய்ப்புகள் ஒரு மக்கள் கூட்டத்தில் நிகழ்வது இயல்பாதலால், ஒவ்வொரு மனிதனும் ஏனைய மனிதர்களுடன், விருப்பு வெறுப்புகள் உருவாகுமாறு கொண்டிருக்கும் உறவுதான் 'சமூகம்' என்று சிலர் கருதுவர். "மனிதன் கொள்கின்ற தொடர்புகள் எல்லாம் சமூகத் தொடர்புடைய கருத்தியல் பொருள்" என்று ஜெ. நாராயணன் கூறுவது இதனை உணர்த்தும். பாரதிதாசனுடைய பல கவிதைகளில் 'சமுதாயம்' என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தியுள்ளார். சான்றாக,

**"தமிழறிந்த தால்வேந்தன் எனை அழைத்தான்**
**தமிழ்க்கவியென் றெனையவனும் காத லித்தாள்!**
**அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ் ஆவி**
**அழிவதற்குக் காரணமா யிருந்த தென்று**
**சமுதாயம் நினைத்திடுமோ?..."**

என்ற பாடலில் வரும் 'சமுதாயம்' என்பது சிந்திக்கும் உணர்வுடைய மக்கள் கூட்டத்தைக் குறிப்பதை உணரலாம். ஆறறிவு கொண்ட குழுவே சமுதாயம் என்று கூறப்படும். 'சமுதாயம்' என்பதை விளக்கவரும் அ.மு. பரமசிவானந்தம், "சமுதாயம் என்ற சொல் ஆறறிவு படைத்த மக்களினத்தோடு பிணைந்து நிற்கும் ஒன்று. ஆறறிவு படைத்த மக்கள் இனத்துள்ளும் உணர்வற்ற, அடிப்படை உணர்வில்லாத மக்கள் கூட்டம் 'சமுதாயம்' என்னும் சொல்லுக்கு இலக்காகாது" என்பார். இதனால், உணர்வுடைய மக்கள் கூட்டமே சமுதாயமாகும். நல்லது கெட்டது என்பதைச் சிந்திக்கும் உணர்வே பகுத்தறிவு ஆகும். இத்தகைய அறிவு இல்லாத விலங்குகளின் கூட்டத்தை சமுதாயம் என்று கூறமுடியாது. சிந்திக்கும் கூட்டமே சமுதாயம் ஆகும்.

**மனித நேயப் பார்வை**

இந்திய நாட்டின் பழம்பெருமையினையும் பண்பாட்டுச் சிறப்பினையும் மேன்மைப்படுத்தி அடிமைப்பட்டுக் கிடந்த மக்களிடையே நம்பிக்கை ஒளியினைப் பாய்ச்சிட முயன்றுள்ளார் பாரதி. இந்தியர்கள் தங்களிடையே நிலவும் பேதங்களை மறந்து, அனைவரும் ஓரணியில் நிற்க வேண்டுமென விரும்பும் பாரதியின் மன விருப்பும் கவிதையாக வெளிப்பட்டுள்ளது. 'ஒளி படைத்த கண்ணினாய் வா வா' என்று அழைப்பு விடுத்த பாரதியார், தனது கவிதையில்,

**"எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்**
**எல்லாரும் இந்திய மக்கள்**
**எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை**
**எல்லாரும் இந்நாட்டு மன்னர் - நாம்**
**எல்லாரும் இந்நாட்டு மன்னர்"**

ISSN: 2454-3993 www.shanlaxjournals.in

என்றும் பாடுகிறார். இக்கவித்துவ வரிகள் கவிஞனுக்கே உரித்தானது. பிறருடைய துயரினைக் களைந்திட க்கறையற்ற மனநிலையினைக் கண்டனம் செய்யும் பாரதி,

**“சொந்தச் சகோதரர்கள்**
**துன்பத்திற் சாதல் கண்டும்**
**சிந்தையிரங்காரடீ - கிளியே**
**செம்மை மறந்தாரடீ**
**பஞ்சத்து நோய்களிலும்**
**பாரதர் புழுக்கள் போல்**
**துஞ்சத்தம் கண்ணாற் கண்டும் - கிளியே**
**சோம்பிக் கிடப்பாரடீ”**

ன்று போலியான மனிதர்களைக் கவிதையின் மூலம் வெளிப்படுத்தும்போது தன் ஆதங்கத்தைச் சமூக மர்சனமாக முன் வைக்கிறார்.

“ஒரு பெண் என்பவள் ஆணுக்கு அடிமைப்பட்டுத்தான் இருக்க வேண்டும்” என்ற கட்டமைப்பைத் ாண்டிப் பெண்கள் வெளியில் வர முற்பட்டால், அதனை இந்தச் சமூகம் ஏற்றுக் கொள்ள மறுப்பதையும் ாரதி வன்மையாகக் கண்டிக்கின்றார்.

**“பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் - புவி**
**பேணி வளர்த்திடும் ஈசன்**
**மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல**
**மாதர் அறிவைக் கெடுத்தார்”**

என்ற கவிதை வரிகள் மூலமாகச் சமுதாயத்தில் பெண்களுக்கான உரிமை மறுக்கப்படுவதை எதிர்த்துப் போராடினார்.

**சுரண்டல் பார்வை**

நாட்டைக் குறித்த கண்ணோட்டமும், நாட்டு விடுதலை குறித்த அக்கறையும், அனைத்துலக நாடுகள் குறித்த ஈடுபாடும் எழுபதுகளில்தான் தமிழ்க்கவிதைகளில் பாடுபொருளாகியுள்ளன. ஏகாதிபத்தியங்களின் சுரண்டல்களின் ஆதிக்கத் தளமாக, இந்தியா உள்ளது. இந்நிலையை, **“அடிமைச் சூடு பொறிக்கப்பட்ட**
**என் முதுகுப்புண்**
**இன்னும் ஆறவில்லை”**

என்று கவிஞர் இன்குலாப்பும்,

**“தேசத்திற்கு நாம் கிடைத்து விட்டோம்**
**ஆனால் இன்னும்**
**தேசம் நமக்குக் கிடைக்கவில்லை”**

என்று கவிஞர் பரிணாமனும்,

**“ஆகஸ்டு பதினைந்தும்**
**ஒரு சூரியனும்**
**தொலைந்து போய்விட்டன”**

என்று கவிஞர் வைரமுத்துவும்,

**“இரவில் வாங்கினோம்**
**இன்னும் விடியவில்லை”**

என்று ஏ. அரங்கநாதனும் இந்திய விடுதலைக் குறித்தக் கவிதை வரிகள் மூலம் தங்களது ஆதங்கத்தை ஆவேசக் குரலாக எழுப்புகின்றனர்.

**அரசியல் பார்வை**

அரசியல் வாழ்க்கை நிரந்தரமில்லாதது. அதில் நண்பன் எனச் சொல்லி பாசம் காட்டவும் முடியாது, பகைவன் எனக் கூறிக் கெடுதல் பண்ணவும் முடியாது. இன்று அரசியலில் யாரும் நிரந்தரமாக இருக்க முடியாது என்பதைக் கவிஞர் வைரமுத்து,

**“இனிமேல் கட்சிக்கு**
**பன்றிச் சின்னம்தான்**
**கேட்க வேண்டும்**
**அது தானே**
**பல குட்டிபோடுகிறது”**

எனக் குறிப்பிடுகிறார்.

அரசியல் தலைவர்கள் ஒரு அணியில் நிலையாக நிற்பதில்லை என்றும், தன்னுடைய பதவி இலாபத்திற்காக நாளும் பொழுதும் மாறிக் கொண்டே இருக்கிறார்கள் என்றும், அதில் மக்களுக்குத் [illegible] உள்ளன என்றும் கூறி, கொள்கைப் பிடிப்பில்லா அரசியல்வாதிகளைக் கேலி செய்கிறது இக் கவிதை வரிகள். தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகள் செயல்படும் தன்மையை,

**"இன்றைய அரசியல் வாதிகளுக்கு**
**ஜனங்கள் தேவையில்லை**
**பணங்கள் தேவை"**

என்று எ.மு.வசந்தன் சுட்டுகிறார். பணம் இருந்தால் ஜனங்கள் தன்னைத் தேடி வந்து ஓட்டு போடும் காலமானது இன்றும் நடந்து கொண்டிருக்கிறது. பணம் கொடுத்து மக்களை வாங்கித்தான், பதவியில் அமர ஆசைப்படுகிறார்கள் என்பதை,

**"நாட்டுக்காகச்**
**சிந்தித்த தலைவர்கள் அன்று**
**ஓட்டுக்காகவே**
**சிந்திக்கும் தலைவர்கள் இன்று"**

என மு.மேத்தா சாடுகிறார். அன்றைய கால அரசியலில் நாட்டுக்காகப் பணி செய்யத் துடித்த தலைவர்கள் பலர் இருந்தனர் எனவும் குறிப்பிடுகிறார். ஆனால் இன்று எத்தனை ஓட்டு விழுந்தது என்று எண்ணிப்பார்க்கும் தலைவர்கள் தான் இருக்கிறார்கள் என்பதை,

**"மழைநீரும் சாக்கடையும்**
**ஒன்று சேருகிறதே**
**இது தேர்தல் காலம்"**

என்று அன்பாதவன் தன் கவிதையில் தேர்தல் காலத்தைப் பற்றிக் கூறுகிறார்.

**"மதம் வந்தது**
**நீ வருணமாய்ப் பிரிந்தாய்**
**வருணம் வந்தது**
**சாதியாய்ப் பிரிந்தாய்"**

எனும் பாடல் வரிகள் தனிப் பிரச்சனைக்கும், சாதிக் கலவரத்திற்கும் தூண்டு கோலாய் இருப்பது இந்தத் தேர்தல் காலம் தான் என்று தெளிவாகக் கூறுகிறது. மேலும் அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் வாக்குறுதிகள் மட்டுமே கொடுப்பார்கள் என்பதை,

**"அடிக்கடி**
**ஆடை மாற்றும்**
**கோடை!**
**அதன் முகத்தில்**
**அரசியல் வாதிகளின்**
**ஜாடை"**

எனக் குறிப்பிடுகிறார். தேர்தலில் ஜெயிக்க வேண்டும் என்ற அற்ப ஆசையில், மக்களின் மனதைக் கரை "இந்தப் பணியை உங்களுக்குச் செய்து முடிப்பேன், இந்த வேலையை உங்களுக்கு வாங்கித் தருவேன்" எனக் கூறி ஓட்டு வாங்குவார்கள். ஆனால் தேர்தல் முடிந்தவுடன் ஆடை மாற்றும் கோடையைப் போல இங்கு அரசியல்வாதிகள் மாறி விடுவார்கள் என்று தெளிவாக ஆசிரியர் கூறுகிறார்.

**"மாடி வீட்டு மந்திரி**
**குடிசை வீட்டுக்**
**கதவு தட்டியது**
**அது ஒரு காலம்**
**தேர்தல் காலம்"**

தன் வேலை முடிய வேண்டும் என்று நினைக்கும் இன்றைய தலைவர்கள் குப்பையில் வாழும் ஏழை மக்களின் வீட்டுக் கதவையும் கூடத் தட்டுவார்கள் என்று தேர்தல் கால நிலையை எ.மு.வசந்தன் கூறுகின்றார்.

**மனிதப் பார்வை**

மனம் எப்போதும் தீயதை விரட்டி, நல்லவற்றை உணர வேண்டும். மென்மையான உணர்வுகளைக் கொண்ட இதயத்தில் துன்ப துயரச் சிந்தைகளை நிரப்பி வைக்கக் கூடாது. வேண்டாத பாரங்களைச் சுமக்கக் கூடாது. மனத்தை அடக்க நாம் எண்ணத்தை வேரறுக்க வேண்டும். அதனைப் பூட்ட வேண்டியதில்லை என்பதை ஈரோடு தமிழன்பன்,

**"மனத்தை எங்கிருந்து பூட்டுவது?**
**உள்ளே இருந்தா**
**வெளியே இருந்தா?**
**என்று**
**கேட்டான் மாணவன்**
**ஆசான் சொன்னார்**
**பூட்டுவது**
**நீ என்று நினைத்துக் கொண்டு**
**எங்கிருந்து**
**பூட்டினாலும் பயனில்லை"**

என்கிறார். மனித மன இயல்புணர்வுகளும் நிறைவேறாத ஆசைகளும், வெளிமனத்திற்கு வராமல் அடக்கி வைக்கப்படுகிறது. மனம் என்னும் ஒப்புயர்வற்ற பொருளை, ஒருங்கிணைத்து வாழ்வில் முன்னேற வேண்டும். வாழ்வில் எது நிகழ்வுறினும் அதனதன் போக்கில் விட்டுவிட்டு, மன நிறைவோடு வாழ்ந்து சிரிக்கப் பழக வேண்டும். சிரிப்பு இனிமையைக் கொண்டு வரும். மகிழ்ச்சியின் அடையாளம் உடலில் ஏற்படுத்தும் உன்னத உள்ளக் கிளர்ச்சியிது. இச்சிரிப்புச் சில சமயங்களில் மௌன பாஷையாகும் என்பதை,

**"அப்பங்களைக் குழந்தைகளுக்குக்**
**கொடுங்கள்**
**அழுகிற குழந்தைகள்**
**சிரிக்கட்டும்**
**அப்பங்களுக்கு என்னால்**
**சிரிப்பூட்ட முடியாது**
**அப்பங்களை**
**உண்ணும் குழந்தைகள்**
**மூலமாவது அந்தச் சிரிப்பைப் பார்க்கிறேன்."**

என்கிறார் என். ஆர். தாசன். உலகில் மற்ற உயிரினங்களுக்கு இல்லாத அரிய செயல்பாடு சிரிப்பு. எந்த உயிரினங்களிடமும் இச்சிரிப்பைக் காண இயலாது. கள்ளம் கபடமில்லாத வெள்ளைமனச் சிரிப்பைக் குழந்தைகளிடம் மட்டுமே காணமுடிகிறது. எனவே அப்பமாக இல்லாமல் சிரிக்கப் பழகுங்கள் என்கிறார் கவிஞர்.

**முடிவுரை**

கவிஞர் உள்ளத்தில் எழும் எண்ணங்களின் பிரதிபலிப்பே கவிதையின் பிறப்பிடமாகும். படிப்பவர்களின் மனதில் அலைகளை ஏற்படுத்துவதே கவிதையின் சிறப்பிடமாகும். விடுதலை பெற்ற நாம் ஆதிக்கச் சக்திகளிடம் அடிமையாய் வாழும் சூழல் மாற வேண்டும் என்றும், சமுதாயத்தில் நடக்கும் சீர்கேடுகள் தடுக்கப்படாமலும், பிரச்சினைகள் தீர்க்கப்படாமலும் இருப்பதற்குக் காரணக் கர்த்தாவாக இருப்பவர்கள் அரசியல்வாதிகளே என மனம் வருந்திக் கவிதைகளில் படைத்துக் காட்டியுள்ளனர். இன்றைய அரசியல்வாதிகள் செல்வாக்கினால் உயர்ந்து, மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவே இல்லை என்பதைக் கவிதைகளில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் மனநிறைவோடு வாழ நல்மனமும் சிரிக்கும் குணமும் தேவை என்பதையும் கவிதைகள் கோடிட்டுக் காட்டியுள்ளன.